உளி 1 | ஓசை 24 | ஜனவரி 2019 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



**ஆசிரியர்:**
ஜின்னா அஸ்மி

**நிர்வாகக் குழு:**
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்

**ஆசிரியர் குழு:**
படைப்பு தேர்வுக்குழுமம்

**வடிவமைப்பு:**
முகம்மது புலவர் மீரான்

**முகப்பு ஓவியம்:**
கலைமாமணி அன்பழகன்

**உள் ஓவியங்கள்:**
கொ.வடிவேல்

**இணையதள முகவரி:**
www.padaippu.com

**அலுவலக முகவரி:**
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
மதுரை வீரன் நகர் ,#8
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com

## உள்ளே

| பெயர் | பக்கம் |
|---|---|
| சந்துரு | 04 |
| கவித்தா சபாபதி | 05 |
| அகத்தின் அழகு ரெஜி | 05 |
| மதுசூதன் | 06 |
| கரு.கிருஷ்ணமூர்த்தி | 07 |
| ஜபீர் | 07 |
| மஞ்சு கண்ணன் | 07 |
| வன்னி | 08 |
| ஏ.நஸ்புள்ளாஹ் | 09 |
| காதலாரா | 10 |
| காயத்ரி | 10 |
| பிருந்தா சாரதி | 11 |
| சௌவி | 12 |
| அழ.இரஜினிகாந்தன் | 13 |
| பி.கே.சாமி | 14 |
| கோ. ஸ்ரீதரன் | 15 |
| கயல் | 16 |
| ஜெயாபுதீன் | 17 |
| மெய்யன் நடராஜ் | 18 |
| ராம் பெரியசாமி | 19 |
| முகம்மது பாட்சா | 20 |

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| பெயர் | பக்கம் |
|---|---|
| வலங்கைமான் நூர்தீன் | 20 |
| தமிழ்மணவாளன் | 20 |
| முனியாண்டி ராஜ் | 21 |
| ஜி.சிவகுமார் | 21 |
| ஜானு இந்து | 22 |
| ஆண்டன் பெனி | 22 |
| அகன் | 23 |
| துரை.நந்தகுமார் | 24 |
| குமரேசன் கிருஷ்ணன் | 25 |
| கவிஜி | 26 |
| சகி | 27 |
| கட்டாரி | 28 |
| கார்த்திக் திலகன் | 28 |
| தேன்மொழி தாஸ் | 29 |
| அன்பில்பிரியன் | 29 |
| கதிர்பாரதி | 30 |
| ரிஸ்கா முக்தார் | 30 |
| சிவயட்சி | 30 |
| ஜே.பிரோஸ்கான் | 31 |
| நிஷ்பான் ஹம்ஸா | 32 |
| லதா நாகராஜன் | 33 |
| அ.வேளாங்கண்ணி | 33 |
| கல்பனா ரத்தன் | 34 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| வேதநாயக் | 35 |
| முகில் நிலா தமிழ் | 36 |
| ரா.ராஜசேகர் | 37 |
| சூர்யநிலா | 37 |
| ஜான்ஸி | 37 |
| ஜமீல் | 38 |
| வீ.கதிரவன் | 38 |
| கோபி சேகுவாரா | 39 |
| அ.வால்டர் ராபின்சன் | 39 |
| வணவை தூரிகா | 40 |
| சகா | 41 |
| மு.இளையா | 42 |
| வ.இரா.தமிழ்நேசன் | 43 |
| மஹா பர்வீன் | 43 |
| ஜெ.ப.செல்வம் | 44 |
| கவிதை மொழியன் | 45 |
| பெனடிக் அருள் | 46 |
| கா.இலட்சுமணன் | 47 |
| சோமு.சக்தி | 47 |
| க.அய்யப்பன் | 47 |
| சுயம்பு | 48 |
| தனபால் பவானி | 48 |
| நுஹா | 49 |

# புத்தகமாய் ஆடும் கடிதம்



**சி**று வயது இரவுகளை
அச்சுறுத்தும்
இரண்டு பக்கம் தூலம் வைத்த
ஓலை வீட்டின்
மூன்றாம் அறையில்
அடுக்கப்பட்ட சால்களுக்கு பக்கமாய்
இறங்கும் ஓலைப் படலின்
மூங்கில் கழியில்
சூழ்ந்த மென் இருட்டில்
வளைந்த கம்பியில்
குத்தப்பட்டு
புத்தகம்போல் ஆடிக்கொண்டிருக்கும்
அப்பாவின் கடிதங்கள்...
மாதம் ஒரிருமுறை
வருமந்த
நீல நிறக்கடிதத்தை
அம்மாவுக்கு வாசித்து காட்டியதும்
மறவாமல் கம்பியில் குத்தச்சொல்வார்...
அம்மா
விளையாடும் அவசரத்தில்
குத்திவிட்டு ஓடுகையில்
நெடு நேரம்
ஆடுமந்த கடித முட்டை
அம்மாவின் இதயமென்று
அப்போது தெரியவில்லை...!

**சந்துரு...**



**உ**ச்சி வெயில்
கூரையேறுகிறது
நிழல்

அழகான கன்று
வாஞ்சையுடன்  நக்குகிறது பசு
எஜமானின் கையை

**கவித்தா சபாபதி...**

**வி**ளைந்து பொலிந்த
வயலின் அறுவடைக்கு
இன்னும் சிலநாட்கள்
காத்திருக்கத்தான் வேண்டும்..

விட்டதைப் பிடித்து
விடிவெள்ளியின் பிரகாசம்
பார்த்துவிடத்தான் நினைத்திருந்தது மனம்..

பொறுத்துக் கொள்ள
பூமி தயாராய் இருக்கும்போது
காற்றுக்கென்ன பொறாமை..

பயிர்களைப் படுக்க வைத்து
பலமிழந்த மனதை வதைத்து
சுழற்றி ஓர் ஆட்டம்..

ஆட்டம் முடிந்த ஆடுகளத்தில்
அரங்கேறியிருந்ததெல்லாம்
அலங்கோலங்கள்..

எத்தனை நாள் உழைப்பு
எப்படித் தாங்கும்
இதயத்துடிப்பு..

பயிரின்
கதிர்  சிதைந்த அரும்புகளைப்
பதற்றத்தோடு தொட்டுப் பார்க்கும் போது..

**அகத்தின் அழகு ரெஜி...**

# அப்பாவின் கடைசி நாள்



அப்பாவின் தலைப்புறமாய்
அழுதோய்ந்திருந்தாள் அம்மா.
தங்கையின் அழுகை அடங்கியபாடில்லை
தாத்தாவின் படுக்கையில்
மாலை ஏன் எனத்தெரியாமல்
கேட்டான் தங்கை மகன்.
ஃப்ரீஸரில் அப்பாவின்
சடலம் வயிறு பெருத்திருந்தது
அழுவதா வேண்டாமா
என யோசித்து அழுதாள்
அத்தை.
இன்னும் ஒரு மணியில்
எல்லாம் முடித்துவிட
தயாரிப்புகளில் யாரோ சிலர்
அவர் அறையில் இருந்த
சாய்வு நாற்காலியில்
நேற்றைய தினமணியும்
வாசலின் மூலையில்
சில்வர் கலர்
அப்பாவின் டீவிஸ் பெப்பும்
அவருக்காக காத்திருந்தது.
இரு நாள் கழித்து
இறப்புச்சான்றிதழுக்கு
டாக்டர் வரவில்லையென
தகவல் சொல்ல அப்பாவின்
கைபேசிக்கு வழக்கமாய்
தகவல் சொல்லிவிட்டு
பின்னொரு உணர்தலில்
கதறியழ கண்ணீரை
பாக்கி வைக்கிறேன்
அப்பாவை எரியூட்டும்
முன் நான்.

**மதுசூதன்...**



மழைக்கால இரவு
வந்து வந்து போகிறது
அம்மாவின் ஞாபகம்

கரு.கிருஷ்ணமூர்த்தி...

உடல் விலக்கப்பட்ட கலவியில்
அவள் வலி அரும்பிய புணர்தலில் பின்
தவிர்த்திருக்கலாம் சில கருணைப்
பார்வைகளை கைக்குட்டையில்
துடைக்க முடியாத நோவுகள்
உன் தலை கோதலால் கலிப்புறாது
அவள் உடல் துறந்த ஆன்மா
ஊற்றுக்கள் வற்றும்வரை
கொளுத்தப்படுகிறது
பெண்ணுடல் சபிக்கப்பட்டதுதான்
ஆணதிகாரத்தில் ஆண் தன்
உபாதைகளை தணிந்துக்கொள்ள
இரண்டு நாள் தாமதத்தில் பெண்ணின்
திறக்கப்படாத அந்தரங்களின் கதவை
தட்டுகிறான் ஆணின் திறக்கப்படாத
சில மனச்சாட்சியின் முகங்கள்
அழுக்கானதுதான்

ஜபீர்...

ஒருசொட்டுச் சிறுநீர் விட்டு
இருகோடுகள் தெளியக் காத்து
ஒரு கோட்டை வெறித்துப்பார்த்து
விட்டெறியத் தேவையில்லையினி..

இரண்டு, பன்னிரெண்டென நாள்
கணக்குகள் எண்ணி மருத்துவர்
தேடவும் மருந்துகள் உண்ணவும்கூட
அவசியம் இருக்காதுதான்.

இந்த மாசமும் ஒண்ணுமில்லையா
துர்வாசகங்கள் கேட்காமல் தூர்வாரி
செவிப்பறையை ஆணி அறைந்து
சாத்திவிடலாம் நிரந்தரமாய்..

பத்தியமிருந்து உண்ணவும் உடல்
வலி பொருட்படுத்தாது உழைக்கவும்
கனவு கலைக்கவும் வேண்டியிருக்காது
உறைந்துவிட்ட உதிரப்போக்கால்..

மாதத்தில் பாதிநாட்கள் விரதமிருந்தும்
வேண்டுதலை நிராகரித்த கடவுளரை
வேண்டுதலை நிராகரிப்பது இம்முறை
சந்தேகமில்லாமல் அவளுடையதாகிறது..

மஞ்சு கண்ணன்...

# நெய்தல் நாயகன்



கிழக்கு வெளுப்பில்
கீழ்த்திசை வண்ணங்களில்
அலைகளின் அளவில்
அது சொல்லும் தத்தகார மொழியில்
வீசுகின்ற காற்றில்
விழுகின்ற மழையில்
விஞ்ஞானமறிந்தவன் நெய்தல் மகன்

நாட்டிக்கல் மைல் என்பதை
தூரத்து மினுக்கங்களில் அறிந்தவன்

நியூரான்கள் போல கலைந்து கிடக்கும்
நீலக்கலர் நரம்புகளை
பீடி வலித்துக் கொண்டே
பிரித்து மேய்பவன்

தரைகள் பிரித்த நாடுகளில் நாம் வாழ
இவனோ
தண்ணீரால் இணைந்த பேருலகின்
பொது மனிதன்

இவன் கடலைத் தொழுவது போல்
கடவுளைத் தொழுவதில்லை
கடல் தருவது போல் இவனுக்கு
கடவுளே தருவதில்லை

நெய்தல் உறவே
என் மீனவச் சொந்தமே
வாழ்க நீ
நீள் கடல் போலவே!

**வன்னி...**

# ஒரு பறவையைப் போல சுமப்பவன்



இன்னொருவனிடம் இன்னொருவனை
தீக்குச்சி கொண்டு சூரியன் தயாரிக்க
முன்னம்
இன்னொருவன் உனது எதிரியான
சைத்தான் அல்லது மனிதனான மிருகமென
உனது மரமண்டைகளில்
கூட்டிக் கழித்துக் கொள்ளலாம்

தோழமை சுமந்து
சகோதரம் சுமந்து
ஒரு உறவாக அவன்
உனது நட்பில் வாழ்ந்திருக்கலாம்

இப்போது கோரைப்பற்களைக் கொண்டு
மிருகத்தைப் போல தின்னத் துவங்குவதை
குறைத்துக் கொள்ளலாம்

மேலும் ஒரு வேட்டை நாயின்
வெறி கொண்டலையும் சூரியனை
திசையெங்கும் வியாபிப்பதால்
பூமியில் அமைதியற்று தனியொருவனாய்
அலைவாய் நீ

விரிவானத்தின் நிறங்களாய்
நதியின் இசையாய்
பறவையின் ரெக்கையாய் தொலை தூரம்
உன்னோடு பயணம் பண்ண
ஆசை கொண்டு கரைகிறது
நட்பின் நாட்கள்

ஒரு சாமானிய மனிதனைப் போல
அவமானகரமான நம்பிக்கையின்மைகளால்
ஒரு எருமை மாட்டின் கால் கொண்டு
உதைக்க முன்னம்
மறுபரிசீலனை செய்து கொள்

நம் பயணத்துடனான உரையாடல்களில்
உனது பலவீனங்களை
ஒரு பறவையைப் போல நான் சுமந்து
கொண்டிருக்கிறேன்.

ஏ.நஸ்புள்ளாஹ்...

# தாமதம் தவிர்த்த தற்கொலை



இரவின் இமையைக் கீறி
விரலொடிந்த கைகளின் நகத்தில்
உயிர் வாழும் உழைப்பை உரித்து
உலகமயத்தை ஊரும் உன்னதம்...

கனவின் காலடியில் ஊறி
உச்சத்தில் உலவிய சிறகில்
எல்லை எட்டிய யாவும் எரித்து
சரித்திரம் பறிக்கும் மோதல்கள்...

இளமை முதுகில் ஏறி
வளமை தூவிய வானத்தை
அடிமை போர்வைக்குள் ஒளித்து
திறமையை துரத்தும் வாய்ப்புகள்...


மானுட மகத்துவம் மீறி
பல்லுயிர் சிதைத்த வேகத்தில்
முரண்பாடாய் முளைத்த யாவிலும்
மரணம் விதைக்கும் உணவுகள்...

**காதலாரா...**

வெகுவாக உடலெங்கும்
பாரித்துப்போகும் நீலம்
கண்டத்தில் சிக்கிக்கொண்டு
உலகைக்காத்த நீலம்
அது விஷமல்ல அமிழ்தம்
உயிரெங்கும் வியாபித்த நீலம்
மனமெங்கும் மேவியபடி இருக்கும் நீலம்
அது நிறமல்ல குணம்
அழியா நினைவின் குறியீடது
உன்னை மீட்கும் வலுமிக்கது.

**காயத்ரி...**

# பரம்பரை வீடு



நீண்டகாலமாய் பூட்டிக் கிடந்த
பரம்பரை வீட்டின்
கதவு திறக்க
காற்றின் தொடுதலில் உயிர்பெறுகிறது
கூடத்து ஊஞ்சல்.

அறைக்குள் நுழையும் வெளிச்சம் அதில்
அமர்ந்து ஊஞ்சாலாட
அந்நிழலில்
பூத்துப் பூத்து உதிர்கிறது நான்கு
தலைமுறை வாழ்க்கை

பாவாடைச் சிறுமியாக
தாவணிக் குமரியாக
நிறை சூலி மாதாக
தலை நரைத்த பாட்டியாக.

அவற்றைச்
சுவரோவியமாய்
ஒட்டி ஒட்டி
இடமாற்றி இடமாற்றி
விளையாடிக் கொண்டிருக்கிறது
இருளில்
உறைந்து போயிருந்த
ஒரு பரம்பரையின் சரிதம்.

இவை எதையும் கவனிக்கவில்லை
வக்கீல் துணையோடு
அதை விலைபேசி விற்க வந்த
அதன் இந்நாள் மிச்சங்கள்

**பிருந்தா சாரதி...**



ஒரு பகலையும்
ஒரு இரவையும்
பத்திரப்படுத்தி வைக்கலாமென
நேற்றைய பகலையும் நேற்றைய
இரவையும்
மடித்து வைத்தேன்
யாருக்கும் தெரியாமல்
வீட்டுக்குள் எடுத்துச் சென்று
பத்திரப்படுத்த

நீங்கள் என்னைத் திருடன் என்று
விளிப்பீர்களென்றால்
இப்படிச் சொல்லிக்கொள்கிறேன்
நேற்றைய பகலையும் நேற்றைய
இரவையும்
திருடிச்செல்வதற்காக
மடித்து வைத்தேன்

இன்று காலை ஞாயிறு என்பதால்
அவசரமேதுமின்றி நன்றாகச்
சாப்பிட்டுவிட்டு
மடித்து வைத்த இரவையும் பகலையும்
எடுத்துக்கொண்டு வரலாமென
மடித்து ஒளித்து வைத்த மைதானத்திற்குச்
சென்றேன்
மடித்து வைக்கப்பட்ட இரவு
அப்படியேயிருந்தது
மடித்து வைக்கப்பட்டிருந்த பகலோ
எலிகள் குதறிய சிறு மூட்டையைப் போல
சிதறிக்கிடந்தது

சிதறிக்கிடந்த பகலிலிருந்து
மனிதர்கள்
வெளியேறிக்கொண்டிருந்தார்கள்
ஏதேதோ சப்தங்கள் கேட்டன
மடித்து வைக்கப்பட்ட இரவு
எந்தச் சலனமுமின்றி
பேரமைதியோடிருந்தது
இரவைத் தூக்கி என் சட்டைப்பையில்
போட்டேன்
கனமேயில்லாமல் இலேசாக இருந்தது
பின் சிதறிக்கிடந்த பகலை ஒன்று சேர்த்து
மடித்து எடுக்க முற்பட்டேன்
அவ்வளவு கனமாயிருந்தது
தூக்கவே முடியவில்லை
முயற்சித்துக்கொண்டிருக்கையிலேயே
மனிதர்கள் வெளியேறத்தொடங்கினார்கள்

எவ்வளவு முயற்சித்தும்
பகலை மடித்துத் தூக்கவேமுடியவில்லை
ஆனமட்டும் முயற்சித்துவிட்டு
தூக்கமுடியாத பகலை அங்கேயே
விட்டுவிட்டு
இரவை மட்டும் எடுத்துக்கொண்டு
திரும்பினேன்

இனி இந்த இரவுக்குள் ஒரு பகலை
உருவாக்கவேண்டும்
அல்லது பகலைத் தூக்கி வருவதற்கான
உத்திகளை வகுக்கவேண்டும
பகலென்பது அவ்வளவு இலேசானதல்ல

**சௌவி...**



அடிச்ச பெருங்காத்தில்
அத்தனையும் போயிடுச்சே
வடிச்ச கண்ணீரால்
வாய்க்காலும் நெறஞ்சிடுச்சே...

நெட்டையா நின்னமரம்
நெடுவரப்பில் சாஞ்சிடுச்சே
மொட்டையா தலைமுறிஞ்சு
மூளியா போயிடுச்சே...

தெனம்பாத்து வளத்தகிடா
மனம்பதைக்க மாண்டிடுச்சே
செனப்பட்டு நின்ன பசு
செத்துத்தான் போயிடுச்சே...

உடுத்திக்கிட்ட ஒத்த சேல
ஓரமெல்லாம் கிழிஞ்சிடுச்சே
அடுக்குப்பானை சட்டியெல்லாம்
அத்தனையும் ஒடஞ்சிடுச்சே...

தோட்டத்தில் நின்னவாழை
தோள்கொடுத்த ஒத்தத் தென்னை
நீட்டிப் படுத்திடுச்சே
நெடுமூச்சை விட்டுடுச்சே...

ஓலைக் குடிசையெல்லாம்
உருக்குலைஞ்சு போயிடுச்சே
ஆலைக் கரும்பாட்டம்
அடிமனசப் பிழிஞ்சிடுச்சே...

நட்டுவச்ச செடிக்கெல்லாம்
நடுமுதுகு ஒடஞ்சிடுச்சே
கட்டிவச்ச ஆட்டுக்குட்டி
கத்திக் கத்திச் செத்திடுச்சே...

வளங்கொழிச்ச பூமி இப்போ
வக்கத்து நின்னுருச்சே
வயக்காட்டில் வெளஞ்சதெல்லாம்
புயல்காத்து கொன்னுருச்சே...

பெருங்காத்து உருமாறிப்
பேய்க்காத்தா மாறிடுச்சே
வருங்காலம் எமக்கெல்லாம்
கொடுங்கனவா ஆகிடுச்சே...

கடைமடையில் தண்ணிவந்தும்
கழனியெல்லாம் பாலையாச்சே
இடைமுறிஞ்சு கிடப்பதைப்போல்
ஏழை வாழ்க்கை ஊனமாச்சே...!

**அழ. இரஜினிகாந்தன்...**

# கடவுள்

# பெருமூச்சு



வீட்டுக் கூரையை உருவி
உறவை சிக்கறுத்துக் கொள்ளும் முன்
கூரையையே கொண்டு போய்விட்டது
காற்று.

ஓலைக் குடிசையில்
உட்கார்ந்த பிள்ளையும்
ஓலைக் கொடுத்த தென்னம்
பிள்ளையையும்
வேரோடு சாய்த்த காற்றில்
ஈரப்பதம் இருப்பதாக
இனி சொல்லாதீர்கள்.

கடவுளுக்குத்தான் கண் இல்லை
கஜா புயலுக்கு
கண் இருந்ததாக சொல்கிறார்கள்
எங்களை எதற்காக அழவைக்கிறது?

எங்களை
கடலில் தள்ளிவிட்டு
கரையை கடந்தது விட்டது காற்று.

நிவாரணம் வேண்டி
நிர்கதியாக நிற்கிறோம்
வாழ்வாதாரத்தின் மீது
மண்ணைவாரிப் போடுகிறது மழை.

நீங்கள் கணக்கெடுத்து
முடிப்பதற்குள்
காலாவதியாகி இருக்கும்
எங்கள் எதிர் காலம்.

**அ**ட்சயப் பாத்திரத்தை
பிச்சைப் பாத்திரமாக்கியது
அநியாயம் இல்லையா
ஆண்டவரே?

ருத்ரத் தாண்டவம் ஆடி
அடங்காத அகோரத்தின்
கோரைப்பற்களின் ஈறுக்கிடையில்
சிக்கியிருக்கிறது விசும்பல்கள்.

**பி.கே.சாமி...**



ஒரு மொந்தங்கள்ளை
படையல் போட்டபோதும்
குடிக்கவில்லை;
கருக்கலில்,
சாம கோடாங்கி வந்ததை
தனக்குள்
கவிழ்த்தபோதும்
தடுக்க திராணியில்லை;
தன் முன்னே
மூன்று சீட்டு விளையாடி
பீடி புகைவிட்ட
ஊர் வஸ்தாதுகளை
தண்டிக்கவில்லை;
அதிகப்படியாய்
அவன் அணிந்த
மஞ்சள் சாமாந்தியை
அவனுக்கான கள பலி ஆடே
எக்கி தின்ன போதும்
அருவாளை அசைக்க கூடவில்லை;
வழக்கம்போலவே
கருப்பு சாமிதான்
நம்மளெல்லாம் காப்பாத்தற
தெய்வமெனக்கூறி
தன் குழந்தைக்கு சோறுட்டுகிறாள்
கிராமத்து தாயொருத்தி
கூடவே தன்னிருப்பை
தகவமைத்துக்கொள்கிறான்
ஊர் தெய்வம்ருப்பன்...

கோ. ஸ்ரீ தரன்...



**வீ**சப்பட்ட பிரிவின் சிறு கவளமுண்ட
சிட்டுக்குருவி பின்னிரவில் என்
தலையருகில் அழுகிறது.

பிரிவின் விதை புதைத்த நிலத்தின்
நாகலிங்கப் பூச் சர்ப்பம் என் நடுநாக்கில்
முத்தமிடுகிறது.

பிரிவின் கண்ணீர்த் துளி கரைத்த
மழையொன்று கருணையற்று முற்றிய
நெற்பயிரை மூழ்கடித்தது.

பிரிவின் தாகம் செருகிய கவிதைச்
சொல்லொன்று படித்தவர் காயங் கிளறி
குருதி ருசித்தது.

பிரிவின் கதறலைக் கேட்ட காற்று
கோயில்களில் எவரெவரோ ஏற்றிய
பிரார்த்தனைத் தீபங்களின் சுடரழித்தது.

பிரிவுப் பெருமூச்சின் வெப்பம் இலைகளில்
பற்றி மரங்களில் படர்ந்து வனமழித்தது.
...............

இனி இதை நானே தான் சுமக்க வேண்டும்.
இப் பிறவிக்கு விதிக்கப்பட்ட இந்த
உடலைப் போல.

**கயல்...**



# சொற்கள்

ஓநாயின் வாயிலிருந்து
மீண்டு வந்த சொற்கள்
கதறுகின்றன.
நிணம் நாறும் சொற்கள் அவை.
சொற்களின் உடலங்கள்
காயங்களாலானவை.
சொற்களின் ஆன்மாவுக்குள்
ஆழ இறங்கிவிட்ட
குரூரத்தின் பற்குறிகளில்
நுரைத்துக் கிடக்கிறது
அறுத்தெறியப்பட்ட
வேர்களின் உறையாக் குருதி.

மெல்ல
சொற்களின் தலை தடவுகிறான்.
சொற்களின் நரம்புகளை இறுக்குகிறான்.
சொற்களின் நுரையீரலை நசுக்குகிறான்
இறுதியாக
ஆறுதலளிக்கும் சொற்களின் இதயத்தைக்
கையிலெடுத்து
ஆணவத்தின் முள்கரண்டியால்
பசியடங்கும்வரை இசைக்கத்
தொடங்குகிறான்.
நிதானமாய்ச் சொட்டுகிறது
மரண யாழொன்றின் கேவல்...

...

சொற்களின் ஒருநுனியை மெள்ள
ஒட்டுகிறான்.
அடுத்தநுனி சற்றே விலகி
அடுத்தநுனி இன்னும் சற்றே விலகி
நாவடியில் சுரக்கின்ற சொற்களால்
இழைகளுக்கிடையில்
சுற்றிச்சுற்றிப் பின்னுகிற கவிஞனின்
வலையொன்றின் சூட்சுமமறியாமல்
நொய்மையின் நாவால்
வாசித்துக் கொண்டிருக்கிறது
வாசகனொருவனின்
எளிய சொற்கள்.

தேர்ந்த மந்திரக்காரனின்
கைக்கோல் உயர்கிறது.
பார்வைகள் மொத்தமும்
உயர்கின்றன.
திறந்துகிடக்கும் வாய்களில் ஒளிந்திருந்த
சொற்கள்
மெல்ல வெளிவரத் தொடங்குகின்றன.
ஈசல்களைப்போல் மெல்லிறகின் சொற்கள்
காற்றுக்குள் நீந்துகின்றன
மந்திரக்காரன் லாவகத்தின் விரல்களால்
தேர்ந்த சொற்களின்
சிறகுகளைப் பிய்த்து கதறும் சொற்களை
குடுவையிலிட்டுக்
குலுக்குகிறான்.
வெண்புகையாய்க் கசிகிறது
கவிதையொன்றின் நறுமணம்.

**ஜெயாபுதீன்...**

# கனவுகள்



**வா**ங்கவும் இல்லை விற்கவும் இல்லை
தினமும் புத்தம் புதிதாய்
குவிந்து விடுகின்றன கனவுகள்
**
மனசைக் கட்டிப்போடும் தைரியம்
வளர்த்து கொண்டபோதும்
கனவுகளை கட்டிவைக்க முடியாமல்
தவிக்கிறேன் நான்
**
கனவுகள் யாரையும் காயப்படுத்துவது
இல்லை
நீயும் என்னை கனவு கண்டுவிடு
நமக்குள் வளரட்டுமே அன்புத் தொல்லை.
**
நீ என்னை கனவு காண்பதையும்
கனவில் காண ஆசை கொள்கிறேன் நான்
நான் உன்னை கனவில் காண்பதை
கனவிலும் காணக் கூடாது என்கிறாயா நீ!
**
நீ அலுவலகம் வாராத நாட்களில் குட்டித்
தூக்கத்தில் கனவில் காண்கிறேன் உன்னை
உன் அலுவல்களுக்கு மத்தியில் அன்றென்
குட்டித் தூக்கத்தைக் கனவு காண்கிறாயா
பெண்ணே!
**
என் நாசிக்கு ஒவ்வாத வாசனை
திரவியங்கள் பூசாமல் ஒப்பனையற்ற
பேரழகியாக நீ திகழ்வதற்கு
போதுமாக இருக்கிறது ஒரு கனவு
**
நான் உன்னை நேசிப்பதிலும் அதிகமாய்
களங்கமின்றி நீ வந்து போகும்
கனவுகளை நேசிக்கிறேன்.
**

என் போலவே நீயும்
கனவுகளை நேசிக்கப் பழகிவிடு
காதல் கைவிட்டுப் போனாலும்
கனவுகள் நம் கண்விட்டுப் போகாது...

**மெய்யன் நடராஜ்...**



இரவில் தெரியாத
வண்ணத்துப்பூச்சியின்
நிறங்களை பற்றி
யோசித்துக்கொண்டிருக்கிறேன்...

உரசிச் செல்லும் காற்றின்
ஈரப்பதங்களை கையைப்பிடித்து
உள்ளங்கைகளுக்குள்
தேய்த்து எரிதழல் மூட்டுகிறேன்
நிசப்தமாய் வெப்பம் கனன்று
மீளுகிறது...

காலையில் என் தலையை கொத்த
முயன்ற காக்கையை தேடியலைகிறேன்
கூட்டிற்குள் அமர்ந்து ஊர்க்கதை
பேசிக்கொண்டிருக்கிறது...

பேரமைதிக்குள்ளான நடுநிசிக்குள்
எனக்காயொரு அமைதியை
பற்றி யிழுக்க எனதான சுவாசம்
தேடியலைகிறது...

குறுக்கே வெட்டப்பட்ட
நிலவின் வெளிச்சத்தை
குளமது மிதக்கவிட்டாலும்
தவளைகளின் சப்தங்களில்
வளையங்களை குமிழ்களாக்கி
தென்னங்கீற்றுகளின் இருளின்நிழலை
படர விடுகிறது...

வெயிற் வெளிச்சத்தில்
காணக்கிடைக்கும் நிழல்களை
இரவில் தேடிதிரிவதின் மூலம்
மனம் பேரமைதிக்குள்ளாகி
இருளின் என் நிழல் மீது...

ஒரு வண்ணத்துப்பூச்சியின்
நிழல் விழ...

என் வெண்விழித்திரையின்
கருவிழிப்படலம் விரிவதை
உணர முடிகிறது...

**ராம் பெரியசாமி...**

# விசை வன்னி

நள்ளிரவு மதுபான அரங்க மேடையில்
பழைய பியானோவிற்கு முன்
அமர்ந்திருப்பவளுக்கு
சரீரம் முழுவதும் இசைக்குறிப்புகள்.

வாசித்துக்கொண்டிருக்கும்
விழிகளிலிருந்தெல்லாம்
கசிந்துக்கொண்டிருக்கும் காமத்தின் இசை.
செவிகளுக்கு புலப்படாத
அத்தனை அர்த்தஜாம முனகல்களையும்
பதிவுசெய்கிறாள் நடனமாடும் தன் கை
விரல்களில்.

துடித்துக்கொண்டிருக்கும் இதயங்களின்
இரத்த அழுத்தம் ஏறி
இறங்கிக்கொண்டிருக்கும்
இரவுப் பகலாக கருப்பு வெள்ளை
பித்தான்கள்.

**வலங்கைமான் நூர்தீன்...**

அந்த இரவுக்கவிதை
நீண்டு கொண்டே செல்கிறது...
அது தொடங்கிய புள்ளியில்
ஒரு சிற்றாறு ஓடிக் கொண்டிருக்க
அதன் வழியாக நீந்திக் கரை சேர்கிறேன்
விடியலின் வெளிச்சம்
சாளரத்தின் வழியே எட்டிப் பார்க்க
படுக்கையறை களவாடப்பட்டிருந்தது!
எழுதாத வெள்ளைத் தாளாய்ப் பூத்திருக்கும்
ஒற்றை ரோஜா...
விளையாடிக் கொண்டிருக்கும்
சிறுமியின் பார்வையைப் பறித்துக் கொள்ள
ருசியறியாமல் தேநீர் கோப்பையை
அருந்திக் கொண்டேயிருக்கிறேன்...
என் பார்வையின் ஒளியை
விரல்கள் திருடிக் கொண்டனவென்று
கவிதையின் ஆறாவது விரல் சொல்கிறது!
நான்
பிணமாகவே இருப்பது யாருக்குத் தெரியும்?
கவிதை முடியட்டும்
மீண்டும் உயிர் பெற்று எழுகிறேன்.

**முகமது பாட்சா...**

யாசித்துப் பெற்ற பேரன்பின்
யாக்கையில்
உபரியாய் ஊர்ந்து செல்லும்
இந்த எறும்புகள்
இனிப்பென்றும் பாராமல்
கடித்து விடுகின்றன
எப்போதேனும்

**தமிழ்மணவாளன்...**

# பாதைகளின் பயணங்கள்

ஆற்றில் ஒரு காலும்
கரையிலொரு காலுமாய்
மனது கயிறிழுக்கப்பட்டிருக்கிறது
முதலைக்கு வாழ்க்கைப்படவென காத்திருந்த
மனிதங்களின் முகங்களெங்கும்
பிழைக்குறிகள்.
ஒரு பாலம் வேண்டி விண்ணப்பம்
இட்டவன்
பாவங்கள் சுமந்தவனாய்
பிழைகுறிகளுக்குள் அடைபட்டிருக்கிறான்
இனி யாருக்கு விண்ணப்பமிடுவதென்ற
போராட்டத்திலேயே பொழுதும் கழிய
வாழ்க்கையை எடுத்து வீசி விட்டு
நடக்கத் தோன்றுகிறது
ஒரு சராசரி மனிதன்போல்...
எனக்காக கை உயர்த்தியவர்களையும்
பதாகைகள் ஏந்தியோரையும்
ஒரு கணம் திரும்பிப் பார்க்கிறேன்
பயணங்கள் எப்போதும் ஒரே மாதிரிதான்
நிறுத்தங்களில் இறங்கியவர்கள்
மறந்ததுபோல் இல்லை பாதைகள்

**முனியாண்டி ராஜ்...**

முடிவற்று நீளும் கருணையற்ற இரவில்
பித்தனைப் போல் தேடிக்
கொண்டிருக்கிறேன்
கடந்து வந்த காலத்தில்
விழியற்றவனைப் போல்
நான் கவனிக்காமல் வந்த
என் மீதான உன் நேசத்தின் சுவடுகளை.
தாளமுடியாத பெரும் சுமையென
எனதுயிரில் கனக்கிறது
களங்கமற்ற உனதன்பு
நேசித்தவளை காயப்படுத்திய
மிருகம் நான்.
காயப்படுத்தியவனை நேசிக்கும்
தேவதை நீ.
எதிர்பாராதவொரு தருணத்தில்
பொழிந்து நனைக்கும் மழை நீ.
கரங்கள் விரித்து இறுகத் தழுவி
அணைக்கத் துடிக்கும் மனதை அடக்கி
குடைக்குள் ஒளியும்
நோயாளி நான்.
போரில் ஜெயித்தும் தோற்றவளாய்
வெறும் கையோடு களத்தில் மீளும்
உனக்கு தருவதற்கு
என்னிடம் என்ன இருக்கிறது
இந்தக் கவிதையைத் தவிர

**ஜி.சிவக்குமார்...**



**தே**டுதற்கெவருமின்றி
தொலைந்து விட்டிருக்கும் இவ்விரவில்
எரிக்கும் தாபங்களுக்கு பெருமூச்சொன்றை
வைத்திருக்கிறேன் எப்போதும் போலவே

கவியும் இரவுகளுக்குள்
இயல்பு திரும்பும் மனம்
தனிமையின் நீள் விசைக்குள் அமிழ்ந்து
போகையில் நான் என்னை தயார்
படுத்துகிறேன் நிஜத்தை ஏற்பதற்கு

விரும்பியதாய் சொன்னவர்களிடமிருந்து
விலகிச் செல்வதும்
இசை கசியும் இரவுகளில் அலையும்
ஞாபகங்களைக் கடப்பதுவும் எத்தனை
கடினம்?

சிறுகச் சிறுக என்னை சிதைக்கும்
இரவுகளில் கன்னத்தில் நழுவும்
கண்ணீர்த்துளிகளை பத்திரப்படுத்துகிறேன்

என்னின் மிச்சங்கள் அவை

மற்றபடி இப்பருவத்தின் சில பனித்துளிகள்
இப்போதைக்குப் போதும் வலுவிழந்த
என்னிரவுகளை இரட்சிப்பதற்கு...

**ஜானு இந்து...**

**வ**ட்டத்திசையில் என் நறுமணப் பட்சி

நறுமணப் பட்சியுன் பறக்கும் திசைகளை
நான்காகவோ எட்டாகவோ
பிரிக்க முடியாததால்
அது வட்டமாகவே இருந்துவிடட்டும்

நிழலுக்குள் வெளிச்சத்தை
ஒளித்து வைப்பது போலவே
சொல்லத் தயங்கிய உன் காதலை
சிறகுகளுக்குள் ஒளித்துக் கொள்கிறாய்

என்னை இரையெடுத்துப் போகையில்
ப்ரியங்கள் யாவற்றையும் ஒரு முத்தமாக்கி
அதனையே என் காதலின் இரத்தச்
சாட்சியாகவும்
உன் அலகில் விட்டுவந்தேன்

இன்று மழைபெய்யாதிருக்க வேண்டும்
பெய்தாலும் என் முத்தம் நனையாதிருக்க
வேண்டும்
நனைந்தாலும் அலகினில் தெறிக்கும்
துளிகள்
உன் சிறகுகளைத் தொடாதிருக்க வேண்டும்

சிறகுகள் துளிகளால் நிறைந்துவிடின்
அதனை உதறாமல் வட்டத்திசையில்
தாளப்பற
கைகளுக்கு எட்டாத போதும்
நீ தருவாயென்றால்
கண்களால் வாங்கிக் கொள்வேன்.

**ஆண்டன் பெனி...**



**சொ**ய்யாங் உருண்டை
நாளைக்கா சுடுவாய்ங்க
அப்பாத்தா?
சொக்கா புதுசா வாங்கி
தருவியா அப்பாத்தா
நாளைக்கு....?
நொடிக்கு முன்னூறு முறை
கேட்ட அமாவாசை
வாயில் கட்டைவிரல்
சூப்பியவாறு உறங்கிப்போனான்...
அமாவாசையின் வினாக்களோடும்
இருளகற்றும் விளக்குகள் உருவாக்கும்
மும்முரத்தோடும்
தன் விரல்களோடு குழைந்திருக்கும்
மண்கூழோடும்
வாழ்க்கை நொடிகளைக்
கரைத்துக்கொண்டிருந்தாள் பொக்கிலை...

கடைத்தெருவில்
இருளகற்றும் விளக்குகளோடு
கடைவிரித்துக் காத்துக்கிடந்தாள்
பொக்கிலைக்கிழவி...
ஈக்களோடும் விளக்குகளோடும்
கொள்வாரின்றியே...!!
விடிந்தால் தீபாவளி....!!
பொக்கிலை மடியில்
படுத்துக்கிடந்தான் அமாவாசை,
இனிப்பு,வண்ணம்,மத்தாப்பு,
கனவுகளுக்குள் கண்கள் தொலைத்து...
அந்தி அன்று முந்தியே வந்தது
கூலிக்கு முன் வரும் பசி போல...
பொக்கலை முகத்தில் இருள் அப்பியது
பெற்றால்தான் சந்தோஷமா
கொடுத்தாலுந்தேன் சந்தோஷம்...
நாம, மத்தவக நமக்கு அளிக்காத
சந்தோஷத்தை,
பொறத்தியாருக்கு கொடுப்போம்,
எழுந்திரிலே...,
என்றவளும்
அமாவாசையும்
ஊருக்குள் இருந்த வீடுகளின்
குறடுகளில்
பொக்கிலையும் அமாவாசையும்
விளக்கொன்று வைத்து மீண்டனர்....!
மீண்டு வந்த வீதிகளில் பம்மலாக
ஒளி வெள்ளம்...
இதுவே,
இப்படித்தான்,
அமாவாசை தீபாவளியானது.

**அகன்...**

# தேடலின் தேடல்



இரவு எட்டு மணிக்கெல்லாம்
வந்துவிடும் அப்பா
ஐந்தல்லது பத்தே நிமிடம்
காலதாமதத்தில் பதறுகிறது.
வந்துவிடுவாரென்பது நிச்சயமென்றாலும்
ஓடுகிறது ரயில் நரம்பில்.
அதுவரை அளவான வீடு
விரிந்திருக்கிறது எல்லையற்று.
புள்ளியாய் தென்படுகிறதே
அதுதான் அதேதான் அவரது வாகனம்
அண்மையின் அண்மையில்
தெளிவானது தன் பிழை.
வெறித்தபடி வெறிக்கும் பார்வை
தாவுகிறது பூனையின் பாதமாய்.
எதிர்பார்ப்பற்ற எதிர்பார்ப்பில்
கால்களைப்பற்றுகிறது வேர்.
உள்ளே வெளியே
வெளியே உள்ளே
நடுவில் நடந்தபடி நகர்கிறது
சேர்ந்திருக்கவேண்டிய நேரம்.
ஈன்றெடுத்த சிசுவை நோக்கும்
அன்னையின் பார்வை
தெருமுழுக்க படர்ந்திருக்க
நிலத்தைப் பிளந்தபடி
முகம்காட்டும் பச்சையமானது
அப்பாவின் வருகை.
மகிழ்வில் திளைத்த மனம்
நெடுஞ்சாலையை கடக்கும்
டாரஸ் லாரியில் பயணிக்கிறது.
ஏதோவொரு அப்பாவும்
எங்கேயோ காத்திருக்கும்
அவரது மகளுக்காக.

**துரை.நந்தகுமார்...**

# வர்ணம்



தன் துயரங்களை
இறைவனின் செவிகளுக்குள்
கடத்த முயற்சிக்கும்
விழியழகியின் கண்கள்
சமீபத்தில் தான் புறக்காட்சிகளை
ஏற்க மறுத்திருக்கிறது.

இவ்வுலகின் மொத்த ஆச்சரியங்களும்
தன் சாயங்கள் வெளுத்து
விழிப்படலத்தின்
கருப்பு வெள்ளைக்குள்
ஒளிந்து கொள்ள..

மூளை நரம்புகள்
விழிகளின் மென்திரைகளில்
பிம்பங்களின் வர்ணங்களை
பதிவிட மறந்த நொடிமுதல்
சுருங்கியது இவ்வுலகம்.

பார்வை நிறமிழந்தவன்
உருவங்களை அருவமாக
உணரத் துவங்கிய நொடிமுதல்
கலியுகக் கடவுள் கல்லுக்குள்
உறைந்த கதைக் கேட்டு...

நீண்டக் குச்சியால் பூமிப்பந்தை
தட்டியபடி ஒலியெழுப்புகிறான்
வர்ணங்களால்
முகப்பூச்சுக் கொண்டவனின்
நெடுந்துயில் கலையுமா?

**குமரேசன் கிருஷ்ணன்...**

# சிலர்கள் பற்றிய இறுதி யாத்திரை



**தூ**ங்குவது போல இருக்கிறது
என்றார்கள் சிலர்
எட்டி அருகே பார்த்த சிலர்
பயமாக இருக்கிறது என
கிசுகிசுத்தார்கள்
இன்னும் சிலர் வாயை
கட்டியிருக்கலாம் என்று
அவர்களுக்குள்ளாகவே பேசிக்
கொண்டார்கள்
இன்னும் கொஞ்ச நாள்
இருந்திருக்கலாம் என்றவர்கள்
நிஜமாக சொன்னார்களா எனத்
தெரியவில்லை
கொஞ்சம் பன்னீர் தெளியுங்கள்
என்றவர்கள் எட்ட நின்றே பார்த்தார்கள்
ஒரு வேகத்தில் மாலை வாங்கி
வந்தவர்கள் போடும் முறை
தெரியாமல் விழிக்கையில்
உதவி செய்தவர்கள் வெறித்து
நின்றார்கள்
வந்தும் போயும் இருந்தவர்கள் போக
அங்கேயே இருந்தார்கள்
சிலரில் சிலர்
இறந்த பிறகு செய்வதறியாது
படுத்தேயிருந்த தாத்தாவுக்கு
அந்த சிலர்தான்
காடு செல்லும் வரை நம்பிக்கை
கொடுத்துக் கொண்டிருந்தார்கள்....!

**கவிஜி...**



தனிமையின் மலர்வனத்தில்
சலனமேதுமின்றி அமர்ந்திருக்கிறேன்..
துரோகத்தின் குறுவாள்களிலிருந்து
இப்போது
நான் வெகுதூரத்தில்
இருக்கிறேன்..

தனிமையின் ரகசிய அறையொன்றில்
என் முகமூடிகளை மெல்லக் களைகிறேன்..
இன்னும்
சத்தமிட்டு கதறியழுகிறேன்..
என்னை துளைத்தெடுக்கும்
கேள்விகள் எதுவும்
இங்கில்லை..

தனிமையின் தீப்பந்தமொன்றை
கைகளிலேந்துகிறேன்..
எனினும்
இருள் என்றிங்கு
எதுவுமில்லை..

இதோ..
அத்தனை அவமானங்களையும்..
அத்தனை துரோகங்களையும்..
அத்தனை இயலாமைகளையும்..
மொத்தமாய் குவித்திந்த
தனிமையின் பெருவெளியில்..
தீயிட்டுக்கொழுத்துகிறேன்..

இனி
வருத்தங்கள் என
ஏதுமில்லை..

**த**னிமையின் சமவெளியொன்றில் மெல்ல
தரையிறங்குகின்றேன்..
வெறுப்பின் நிழல்கள் எதுவும்
இங்கே
படிவதில்லை..

**சகி...**



ஆளரவமில்லா வனங்களுனின்று
பெருங்கூச்சல்
தெறித்துப் பரவிக் கொண்டிருக்கிறது....

இறைச்சி ஆடுகள் தன்
கழுத்தறுப்புக்குச் சற்று முன்னதாக இடும்
ஓலத்தை ஒத்திருக்கிறது
அக் கூச்சல்....!

கூச்சலிலுள் வைத்தழைத்த
அம்மா..... அப்பா... அண்ணா....
யாருக்கும்
அபயக்குரல் பற்றிய சமிஞ்சைகளில்லை.

வனதேவதைகளின்
புராதனக் கோவில்கள்
சுத்தமாயிருந்ததைக் காட்டிலும்
சும்மாயிருந்தது...

இயலாதொரு நிலையில்
கூச்சல் தேய்ந்து முனகலானது...

நடுக்கத்தோடு முனகிக் கிடந்தவளின்
வார்த்தைகள்
தெளிவற்று அவ்வனத்தினுள்
எதிரொலித்துக் கிடந்தன...

அதில் கடவுளர்களுக்கான
சாபமிருக்கலாம்....

**கட்டாரி...**

வெளிச்சம் எல்லா பொருட்களின் மீதும்
தன் அதிகாரத்தை செலுத்துகிறது.
இருளோ யாவற்றையும்
பொத்தி பாதுகாக்கிறது.
மாலை நான் அறைக்கு திரும்பியபோது
இருளும் என் கூடவே வந்தது.
உன் நினைவை எழுப்பி உட்காரவைத்து
விடியும்வரை
பேசிக் கொண்டிருந்தேன்.
அதுவரை காத்திருந்த இரவை
நான்தான் அதிகாலையிலேயே
திரும்பிப்போக சொல்லிவிட்டேன்.
நான்தான் உன்னிடம் பேசுவதே
இல்லையே
நீஏன் என் நினைவுகளிடம் வலியவந்து
பேசுகிறாய் என்று நீ கேட்பது புரிகிறது.
நெற்கதிரும் அருவியும் கூட என்னிடம்
பேசுவதில்லைதான்.
ஆனாலும் அவைகளோடு நான் பேசாமல்
இருப்பதில்லை.
நேற்றுகூட தலைகுனிந்து நின்ற
நெற்கதிரின் மோவாயில்
கைகொடுத்து தூக்கி நலம் விசாரித்தேன்.
மலை இறங்கி வந்துவிட்டு ஏறமுடியாமல்
தேம்பிக்கொண்டிருந்த அருவியிடம் துக்கம்
விசாரித்தேன்.
நிர்பந்தம் ஏதுமின்றி நானேதான்
அதை விரும்பி செய்கிறேன்.
தீபம் என்பது தீயின் கண்வடிவம்.
அது அம்பாளை எவ்வளவு அருகில் இருந்து
பார்க்கிறது.
அப்படித்தான் எனக்கும்
உன்னை பார்த்துக்கொண்டிருந்தால்
போதும்.

**கார்த்திக் திலகன்...**

# திறவுச்சொல்

உருவத்திலிருந்து விடைபெற்ற பின்தான்
உனைச் சந்திக்க வருவேன்
நமது உருவங்கள் மிதக்கும் பூமியை
நீயும் காண்பாய்
மீண்டும் பூமிக்கு நாம் திரும்பும்போது
காற்று சிவப்பு நிறத்திலும்
உயிர் தண்ணீரின் சுவையிலும் இருக்கும்
மலை உச்சியில் எனது வீடும்
பள்ளத்தாக்கின் அடியில் உனது ஊரும்
இருக்கும்
சிலைகளை நீ ரசித்துக் கொண்டிருக்கும்
ஒரு நாளில்
என் நினைவு வரும்
தேடி வருவாய்
அப்போது என்னிடம்
"உனது விரல்கள் கூழாங்கற்கள்"
எனச் சொல்
இதுவே எனைக் கண்டடைய
உனக்கு நான் தரும்
பூர்வஞானத்தின் திறவுச்சொல்

**தேன்மொழி தாஸ்...**

இருக்க விரும்புவதெல்லாம்
வேறு ஒன்றுமில்லை

போகும் வரும் விருந்திற்குரியவர்களின்
பார்வையினால் வெட்டுப்படும்
அழையா விருந்தாளியாக

மகப்பேறு முடிந்து கிளம்புகையில்
சிரிக்கும் தர்மாஸ்பத்திரி வாட்ச்மடேனுக்கு
வெற்றுபாக்கெட்டை துழாவியபின்
உதிர்க்கும் அசட்டுசிரிப்பாக

யாசித்தலின் மேல் உமிழப்பட்ட காறியை
துடைக்கும் கணமாக

மனைவியின் கண்முன்னே
மேலதிகாரியின்வசவுகளால் கூனிகுறுகும்
கணவனின் கண்களாக

வழக்கமாக சாப்பிடும் ஓசி சோற்றினை
முதல்பந்தியிலேயே சாப்பிடுகையில்
மண்டபமேனேஜரால் தரதரவென இழுத்து
செல்லப்படும் சட்டைகாலராக

விபத்தால் படுக்கையாகிவிட்ட
உபயோகமற்றவர்களின்
செல்லாத ஆணையாக

ஒரு சிறிய துணைவேடத்தில்
நடிக்கப்போகும்
முன்னாள் பிரபலமான நடிகையின்
மேக்கப் அறையாக

இருக்க வேண்டுவதெல்லாம்
வேறு ஒன்றுமில்லை

தொண்டையில் அடர்த்தியாய் எரியும்
அவமானத்தின் தணலாக

**அன்பில்பிரியன்...**

# தேவ ரகசியம்

**கா**ட்டாமணக்கு மலரை நீட்டுகிறேன்
பிதா
சுதன்
பரிசுத்த ஆவியின் பெயரால்
என் பிரியமாகப் பெற்றுக்கொள்.
காலத்துக்கும்
அது உனக்கு பரலோகமாக இருக்கும்
நீ அதன் தெய்வமாக இரு.

**கதிர்பாரதி...**

**த**னிமையென்பது
நம் ரகசிய நிலவறை,
அதை வெளியாட்கள்
எவரும்
அறிவதில்லை..
தனிமையென்பதொரு
நஞ்சூட்டப்பட்ட தேநீர்க்கோப்பை,
அதை
துணிந்துப்பருக
எவரும்
முன்வருவதில்லை!!!

**ரிஸ்கா முக்தார்...**

**வி**ழிகளை கொடுத்தவனுக்கு
காட்சிகளை வகைப்படுத்த
தெரியவில்லை...

வண்ணமில்லாததை
ஆகா அற்புதமென்கிறான்...

இருளின் நிறத்தை
இனிமை என்கிறான்...

வித்தியாசங்களின்
விசித்திரம்தான் இவன்...

மயிலிறகின் அழகைவிட
அதன் அலங்காரம்
மேலானதென வாதிடுகிறான்...

புள்ளிகளில்லா மான்கள்தான்
நிலையானது என்கிறான்...

ஏனோ புள்ளியில்லா
மான்களை எப்போதும்
எனக்கு பிடிப்பதே
இல்லை...


இனி அவனையும்
பிடிக்காமல் போகலாம்...

காரணங்கள் பெரிதாய்
ஒன்றுமில்லை...

அவன் தந்த விழிகள்
என் முகத்திற்கு
பொருந்தவில்லை அவ்வளவே...

**சிவயட்சி...**

# காலம்



**கா**லம் காலம் காலம்
என்னை அந்த புழுதி மண் சாலையை
கடந்து இன்னொரு வாழ்தலுக்கான
காலத்தை காட்டி விடுவதற்கென
மிக மிக வேகமாக அலைத்துச் செல்கிறது
நானும் கூடவே பின் தொடர்கிறேன்
எனக்குள் ஆயிரம் ஆயிரம் கேள்விகள்
சுமக்க முடியாமலும் இறக்கிட
வழியில்லாமலும்
காலத்தோடு பயணித்துக்
கொண்டேயிருக்கிறேன்.
உம்மாச்சியின் கிராமியம் மணக்கும்
மண் பானை நெல்லரிசி சோறு பற்றியும்
பச்சை மிளகாய் காரக் கரியும் பற்றியும்
நாக்கு சுவை பட காலம் என்னை சுறு
சுறுப்பாக்கி
இன்னொன்றான காலத்துக்கும் கூட்டிச்
செல்கிறது
களைப்பு இளைப்பாற வேண்டுமென்ற
நிலையில்
மதுர மர நிழலில் என்கூடவே அமர
தவறவில்லை.
வாப்பாவின் காலம் அப்போது என்னை
ஆசுவாசப்படுத்துகிறது.
கிரவல் சாலை சுற்றி வயல் வெளி
இட்லி சாம்பாரு
தோசை சட்னியென பசி தீர்த்தல் கதையது
வீட்டுக் கூரையின் பரண் மேலான
மிளகாய் வத்தல்
உப்புக் கருவாடு
கோது உடைத்த புளியம் பழம்
முற்றத்தில் மர வள்ளி
வேலியை சுற்றி பாகற்கொடி
தோட்டத்து காலமது
நஞ்சற்ற உணவது.
முறுக்கேறிய உடல்
திமிரேறிய நடை அப்பாவின் காலமது.
காலமே என்னை எங்கே அழைத்துச்
செல்கிறாய்
பேசமால்'வந்த சாலைகளையெல்லாம்
அவசரமாக கடக்க வழி செய்து
என் கைகளில் பசியாறு
மதியம் இதுவென்று'காலம்
பீட்சாவையும் வர்க்கரையும்
தந்து விட்டு நகர்ந்து செல்லும் போது
தான்
மனைவி தூக்கத்தை கலைத்தால்.

**ஜே.பிரோஸ்கான்...**

# புத்தன் இறந்துவிட்டான்



**பு**த்தன் ஞானம்
அறியாத மனிதன்
போதி மர நிழலில் அமர்ந்திருந்து
அவனை
அரைகுறையாய் அறிந்த
ஆசாமிகளிடம்
ஞானம் பொறுக்குகின்றான்

அஞ்ஞானத்தின்
குறை பொறிக்கியவன்
மெய் பக்தன் போலாகி
கண்ட கண்ட
போதி மர நிழலில்
புத்தனைக் குடியமர்த்தி
புனித பூமியெனும் சட்டம் இயற்றி
எம் நிலங்களை
ஆட்சியால்
அறுதி எழுதுகின்றான்.

சுதந்திரமாய் பூத்த
தாமரை மொட்டின் இதழ்கள்
பூக்காரியினால் மலர்த்தப்படுகிறது

சாணியால் செய்த
நறமணக் குச்சிகள்
புத்தனுக்கு அத்தராகிறது

காணிக்கைத் தாமரைகள்
உயிர்துறந்த புத்தனிடம்
சூர்யோதயத்தில் மலர
அனுமதி கேட்கின்றன

புத்தன்
இரண்டயிரத்தறுநூறு வருடங்களாய்
.மௌனியாகவே இருக்கிறான்

புத்தன் எப்படி பேசுவான்.
புத்தன் இறந்துவிட்டான்.

**நிஸ்பான் ஹம்ஸா...**



**கா**லம் ஓர் நாணயம் அவ்வளவே....

இன்றைய காலை ஏனோ
மண்டியிட்டு இறைஞ்சுகிறது

காலம் வயோதிகத்தின்
கைத்தடியாகியிருக்கிறது

மேலும் அது தன் உடலை எருமையென
மாற்றி
அருகிருக்கும் மின்கம்பத்தில்
உரசிக்கொண்டிருந்தது

காலம் வாழ்க்கையின் வலியென்பது சரி
ஏனது இரவில் வருகையில் மட்டும்
பயம்கொள்ளச் செய்கிறது

ஏழைச்சிறுவனொருவன்
பழைய காகிதமாய் கசங்கிக்கிடக்கும்
காலத்தைப் பொறுக்கி தன் முதுகின்
மூட்டையில் சேமித்தபடியிருக்கிறான்

யாரும் அதிகரிக்கும் அச்சுமையை
நீக்குவாரில்லை

காலத்தை விற்கும் பொழுது
சில சில்லறைகள் தேறுகிறதோ
இல்லையோ

இறுதியில் நெற்றிப்பொட்டில் வைக்க
ஒரு நாணயம் மட்டும் நிச்சயம்
விட்டுச் செல்லும் காலம்...

**லதா நாகராஜன்...**

**கு**ரங்கு பெடல் போட்டு
ஓட்டிப் பழகிய
என் முதல் சைக்கிள்
அடுக்கு மாடிக் குடியிருப்பில்
அனாதையாய் கிடக்கிறது

**அ.வேளாங்கண்ணி...**



# கண்ணம்மாக்கள்

**சு**ருட்டிய பேப்பருடன்
டைப்ரைட்டிங் சென்றார்கள்
புருவங்களுக்கிடையில் ஸ்ரீ தேவி போல்
குட்டிப்பொட்டு வைத்தார்கள்
நதியா க்ளிப், நதியா கம்மல்
வாங்கினார்கள்
லேஸ் வைத்த உள்ளாடைகள்
பெருமையாய் உடுத்தினார்கள்
வி ஷேப்பில் தாவணி கட்டினார்கள்
க்ளியரிசில் அப்பிய முகத்தில்
பருக்களை கவலையோடு தேடினார்கள்
மணிகள் வைத்த கொலுசு போட்டு
ஜல் ஜல் என சப்தமிட்டு நடந்தார்கள்
இரட்டை ஜடையை முன்பக்கம்
போட்டார்கள்
குரங்கு பெடல் அடித்து சைக்கிள்
ஓட்டினார்கள்
பிரிய நடிகரின் புகைப்படத்தை
புத்தகத்தில் வைத்து ரசித்தார்கள்
வலது கையில் வாட்ச் கட்டினார்கள்
வம்பு பேசிக்கொண்டே வயர்கூடை
பின்னினார்கள்
காதல் பாடல்களை டேப் ரிகார்டரில் அலற
விட்டார்கள்
பாடிகார்ட் பசங்கள் பின்தொடர
பள்ளிக்கூடம் சென்றார்கள்
துப்பறியும் நாவல்களை சுவாரஸ்யமாய்
படித்தார்கள்
காதோரம் நரையோடிய கண்ணம்மாக்கள்
பருவ வயது மகள்களில்
தங்கள் பதின்மத்தின் பிம்பங்களை
மீட்டெடுத்து உயிர்ப்பிக்கிறார்கள்..

**கல்பனா ரத்தன்...**

# மழைக்கால நொதுநொதுப்பு





**மொ**த்த நனைந்து கேசத்தின் முனைகளில்
சேர்ந்து கனமேறி
உதிரும் மழைத்துளிக்கு
லேசாகக் கரிப்பு சுவை.

விடியல் தோறும் இமை அழுந்தும்
அசமந்த கோழியுறக்கத்திற்கு
குளித்த உடல் தரும் மின்னழுத்தம்
விரல் நுனி தொடும் ஜுவாலையே
நிறம்.

சிறுவனின் வட்டச் சில்லு
நீரைப்பெயர்க்காமல் தத்தித்தத்தி
விரைந்து நகர்த்துவது
அவனது கண்களும் குளத்தின்
விடுவிப்பும்.

நடு இரவின் குரைப்பொலி
வீங்கிப் பருத்து தேய்கையில்
ஊளையிடுவதின் அர்த்தத்தில்
கார்வையாக
பாம்பு துரத்துவதான
நெளிகனவின்
பட்டிழை அறுவதில் மீட்பனாகிறது.

மெய்மறந்த அடவுகளில்
முத்திரை தப்பிய வசந்த காலம்
அரைக்கணம் விழிகள் தாழ்த்தி
எனைக் காணல்.

**வேதநாயக்...**



**மு**ப்பதைத்தாண்டிய அவனை
எத்தேச்சையாக சந்தித்தேன்!

வகுப்பறைத் தோழன்
கண்ணியமிக்க நண்பன்
இரண்டு தங்கைக்கு தமையன்
என்பதாலேயே பாதித்தகப்பன்!

எழுதாத வீட்டுப்பாடத்துக்கு
தினந்தோறும் வகுப்பிற்கு
வெளியில் நிறுத்தப்பட்டவன்!

வறுமைக்கிப் பிறந்ததால்
தேங்காய் உறிக்க மாலை
தகப்பனுக்கு உதவுவனுக்கு
வீட்டுப்பாடம் எழுத ஏது நேரம்?

படிப்பில் மட்டும் தான் அவன்
சுமார் ரகம்
பாசத்திலும் அன்பிலும் அவனே
பத்தாவது படித்ததே போதுமென
குடும்பச் சுமை சுமந்தவன்
அடுத்தடுத்த தங்கை இருவருக்கும்
தன் உழைப்பில் திருமணம்
செய்துவைத்தவன்!

உழைத்தே உரமேறிய உடம்பு
வயதை வெளிக்காட்டவில்லை
ஒன்றிரண்டு நரைத்த முடிதான்
அவனுக்கு முப்பதை கடந்துவிட்டான்
என அறிவிப்பு செய்கிறது!

எப்பிடியிருக்க நீ "என்று"
முகம் மலரக் கேட்டவன்
உன் மகளா எனும் போது
முகம் வாடிப் போய்விட்டான்!

தங்கச்சிக ரெண்டு பேருக்கும்"
குழந்தைங்க இருக்கு
எனக்கு இன்னும் கல்யாணம் ஆகல
பொண்ணு இருந்தா சொல்றியா?"

அவன் தோள் சுமை
இறக்கிவைத்து விட்டு
ஓடிப் போய் பேருந்தில் இடம்பிடித்து
தந்துவிட்டு இறங்கிப் போனான்!

என் மனம் கனக்கிறது!

**முகில் நிலா தமிழ்...**



# கடவுளின் விவேகானந்தப் புன்னகை

பெருவெளியில் புகுந்து
விரவிப் பரவி வெள்ளப்பெருங்காடாக்கியது
பேரடர்த்திப் பெருந்திரவமது

சிறுசிறு செடிகளும்கூட
வேரறுந்து மிதந்தாடிச் சென்றன
வெள்ளச் சீறலில் விசிலடித்தபடி

பெருமுயரத்தில் ஆடிய இலைகள்
நுனிநாவால் நீர்ச்சுவை சோதனை
வெள்ளத்தில்
அமிழ்ந்தும் எழுந்தும் சொட்டியும்

வேர்களின் தேசம் வெள்ள தேசத்துடன்
பேருடன்பாட்டுடன்

மேடு பள்ளங்கள் நிரவிக்கொண்டோடிய
பெருந்திரவத்தின் பேயாட்டக் கூத்தில்
சமிக்ஞைக் கிடக்காது அரற்றுகிறது
சாவுக் குருவி மட்டும்

விவேகானந்தப் புன்னகையுடன் கடவுள்
கரையிலமர்ந்து கைகட்டியபடி
அருகில் நானுமொரு குழந்தைச்சிரிப்புடன்

**ரா.ராஜசேகர்...**

இந்நாளின்
ஏகாந்த வெளியில்
நின்றபடி
தவிக்கிறேன்..
கொடூரத்தின் பற்களில்
மாட்டிக் கொள்கிறது
எனது காலம்..
ஆயாசமாகயிருக்கிறது
நாட்களைத் தள்ள..
வலுவற்றக் கைகளை
வைத்து எங்ஙனம்
நகர்த்துவது.
காலத்தின் மொத்த உருவை..?
அன்பின் பரிமாணங்கள்
ஒவ்வொன்றும்
கரையத் தொடங்குகிறது..
நாட்களின் கரையில்
நின்று தவிக்கிறேன்..
ஓர் நாள் தள்ளிப் போகலாம்
இப் பெரும் நதியில்..
இந்த முரட்டு நாட்கள்
அப்போது
கைத்தட்டிக் கெக்கலிக்கலாம்.?!

**சூர்யநிலா...**

பெயரற்ற பறவையின்
அழகற்ற இறகென
அந்தரத்தில் தவழ்ந்து
இறங்கிக் கொண்டிருக்கிறேன்
யான் வேண்டுவதெல்லாம்
ரகசிய குதூகலத்தோடுயெனை
பொதிந்து கொள்ளும் சிறு வெளி
பயனுண்டு இல்லையென
தர்க்கிக்காத ஒரு குழந்தையின் மென்கரம்

**ஜான்ஸி...**

# பச்சைக் கொலை



**மே**ல் தூக்கி
ஆசிர்வதிக்கும்
கரங்களெல்லாம்
கடவுளல்ல...

கடைவீதி அமர்ந்து
கூவிக்கூவி கற்றை கீரை
விற்கும் அவளிடமும்
இருக்கலாம்

எங்கோ
ஓர் மூலையில்
வாடும் பயிர் கண்டு
தலையிலடித்துக்கொள்ளும்
கிழவனிடமும் இருக்கலாம்

கிடைத்த பிச்சையில்
நாய்க்கு பாதி தரும்
பிச்சைக்காரனிடமும்
இருக்கலாம்

தடுக்கிவிழப்போகும்
உங்களை பாத்துப்பா எனும்
பைத்தியத்திடமும்
இருக்கலாம்

கொடுக்க ஏதுமில்லையென
மனதால் அழும் உங்களிடமும் இருக்கலாம்
கடவுளின் கரங்கள்...

**வீ.கதிரவன்...**

**து**ளியும் கருணையற்று
தான் திட்டமிட்டுப் புரிவது
பச்சைக் கொலைதானென்று
தெரிந்திருந்த போதிலும்
அடியோடு வெட்டிச் சாய்க்கும்
சிறியதும் பெரியதுமான மரங்களால்தான்
துளிர்த்துச் சடைக்கிறது
வாடி உதிர்ந்து போன
மரம் வெட்டியின் தினசரி வாழ்க்கை

**ஜமீல்...**



**நா**ஸ்தென்கா
இனியும் உன்னை காண முடியாது
அது அத்தனை கனமாய்
இருந்துவிடாதுதானே
அழிவின் இறுதி கண்ணீர்
எத்தனை நீளம்
எவ்வளவு நிம்மதி
பிரியங்களின் பிரார்த்தனைகள்
எவ்விதத்தில் அனாவசியம்
தனியே நிகழ்ந்துகொண்டிருக்கும்
இந்த வெண்ணிற இரவில்
எப்போது துவங்குமென
காத்திருப்பின் கோப்பை தேநீரோடு
கருணையற்ற நினைவுகள் புலர
தாஸ்தோவ்ஸ்கி யாரோ...

**கோபி சேகுவேரா...**

**ச**பிக்கப்பட்ட சில தகப்பன்கள்
இப்பெருநகரத்தின் குறுகிய சந்துகளில்
சிதறியிருக்கிறார்கள்
தினசரி சிகரெட் புகைப்பதைக்
குறைத்துக் கொள்கிறார்கள்
மதுவை வெறுப்பதுபோல் தங்களுக்குள்
பாசாங்கு செய்கிறார்கள்
பின்னிரவுகளில் ஒரு தம்ளர் நீரில்
காமத்தை விழுங்குகிறார்கள்
நகைக்கடனின் வட்டிக்காகவும்
பள்ளிக் கட்டணங்களுக்காகவும்
சிலவேளைகள் உணவைப்
புறக்கணிக்கிறார்கள்
நோய்மையின் தீவிரத்தை
யாருக்கும் தெரியாமல்
பார்த்துக்கொள்கிறார்கள்
மேலதிகாரியின் அர்ச்சனைகளில்
மானத்தைத் தெரிந்தே
தவற விடுகிறார்கள்
காதலை காற்றில் கடத்தித்
திரும்பப் பெறுகிறார்கள்
ஆறு நாட்களின் கழிவிரக்கத்தை எரியூட்ட
வாரத்தின் வால்நுனிகளில்
மொத்தத் தகப்பன்களும்
ஊர்களை நோக்கி விரைகிறார்கள்
சில ஈரமுத்தங்களில்
சில ஆரத்தழுவல்களில்
அனைத்தையும் தொலைத்து
மீண்டும் சபிக்கப்பட்டவர்களாய்
பெருநகரத்திற்கு விரைகிறார்கள்.

**அ.வால்டர் ராபின்சன்...**



**உ**ழைத்த அசதி
வியர்வை நசநசப்பு
கலைந்த தலை
சிரிப்பு தொலைந்த முகம்
குறிப்பிட்ட இரண்டு நிற
பழைய புடவையில் ஏதேனும் ஒன்றில் என
மாலை எட்டு முப்பதுக்கு வரும் அவள்
காலை ஏழு முப்பதுக்கு
தன் பள்ளி சீருடையில் உள்ள இரண்டு
பிள்ளைகளுடன்
பரபரப்பாய் கிளம்பிப் போவதை
தொலைக்காட்சியில் நாடகம்
பார்த்துக் கொண்டிருக்கும்
தெரு வாசி பெண்கள் வீட்டுக்குள்ளிருந்தே
சொல்லி விடுவார்கள்...

அவள் போன தடமெங்கும்
அவ்வளவு சென்ட் வாசம்...

வரும் நூற்றுப்பத்தில்
போக்குவரத்துக்கு முப்பது போக
தினக் கூலி என்பது வீதம்
மாதம் இரண்டாயிரத்து நானூரு
சம்பாதிக்கும் அந்த இளம் விதவைக்கு

ஊதுவத்தி கம்பெனியில்
சூப்பர்வைசர் வேலை...!!

**வணவை தூரிகா...**

# இயற்கையின் உறங்கா அழகிய நொடிகள்



உறக்கம் தொலைத்த
இரவுகளுக்கு மத்தியில்
மனிதன் சிதைக்கா
கனவைத் தேடிய பயணம்...

உச்சிக் கிளையில் உறங்கும்
நிலவின் கூட்டுக்குள் தேனீக்கள்,
உறக்கம் கலைக்காமல்
பேசிக்கொள்கிறது மரங்கள்...

குளிரில் நடுங்கிய
பூக்களின் புன்னகையில்,
கானகத்து வண்டுகள்
காது உரசி காதல்
சொல்லி விட்டுப் போகிறது பூக்களிடம்..

தூரத் தெரிந்த அருவி
குளித்துப் பறந்த கூந்தல்
சிதறலில் அள்ளித் தெளித்தது பனித்துளி
சிறகடிக்கிறது மனங்கொத்தி..

தரை இறங்கிய மேகமும்
காற்று இசைத்த
காதல் பாட்டிற்கு,
தாளம் கொட்டுகிறது...


நடத்திச் செல்கிற
பாதையெலாம்
இசையின் விரிப்பு,
பூவின் மூச்சாய்...
வண்டின் மோனமாய்...
மூங்கிலின் ராகமாய்...

எத்தனை இசை...
எத்தனை வண்ணம்...
எத்தனை வாசம்...
எத்தனை அழகு...

அடர்ந்த வாழ்வின்
அர்த்தம் சொல்கிறது,
இயற்கை இறுக்கிக் கட்டிய வேர்கள்...

**சகா...**

# அந்த அவன்



பறவையும் மிருகமும் கலந்ததான
முகத்தை கொண்டவனாக அவன்
கடந்து கொண்டிருந்தான்
அவன் உடலில் மின்னலாய் மின்னும்
வண்ண வண்ணமான ஓவியங்களே
கவர்ச்சியாய் கோலோச்சின
அவன் தன்னை கருணை மிகுந்த
கடவுள் என சொல்லிக்கொண்டே
சுற்றிக்கொண்டிருந்தான்
தன் வலது கையில் சொர்க்கமும்
இடது கையில் நரக நெருப்பும்
உள்ளதாய் மக்களை நம்ப வைக்க
வாதாடிக்கொண்டிருந்தான்
அவன் தலை மேல் பெரிய நகரமே
வீற்றிருந்தது நாளடைவில் அவனும்
அந்த நகரமாகவே மாறியிருந்தான்
துன்பத்தால் துவண்டழுதவர்களுக்கு
மேன் மேலும் துன்பமாகயிருந்தான்
இன்பக்களிப்பில் திரிபவர்களுக்கு
மேன் மேலும் இன்பமாயிருந்தான்
நேரம்பார்த்து திடீர் திடீரென அவன்
தன் ஓவிய நிறத்தை மாற்றியபடியே
தானொரு பச்சோந்தி பாவியென
நிரூபித்துக்கொண்டிருந்தான்
அவ்வப்போது
அவன் வாயிலிருந்து வெளியான
இடிந்த சொற்களால் சிறு மக்களும்
இடிந்துக்கொண்டேயிருந்தனர்
அவன் இரு கொம்புகள் கொண்ட
காளையாய் மாறி வரும்போதெல்லாம்
மனிதத்தின் உயிர் கர்ண கொடூரமாய்
பறிக்கப்பட்டது
பறவையும் மிருக சாயலும் கூடிய
அந்த நெருப்புமுகம் அவனின் கொடிய
வரலாறை இடைவிடாது எழுதியடியே
இறந்துக்கொண்டிருந்தது!

**மு.இளையா...**



பின் பனிக்காலத்தின்
யாமத்திலும் விழித்துக் கொண்டிருக்கிறேன்;
எனது கனவுகள்
இமைகளைத் தேடி
காத்திருக்கின்றன!

நான் நினைவுகளில் என்னை
மீட்டிக்கொண்டிருக்கிறேன்;
இரவு தன் இரகசியங்களை
அவிழ்க்கத் தொடங்குகிறது.

நினைவுகளின் மீட்டலில்
புதிது, புதிதாய்
உருவெடுத்து
இருள் கவ்விய இரவிலும்
காட்சியாய் விரிகிறேன்.

இருள் கவ்விய
அந்த இரவிலும்
என்னையே, எனக்கு
காட்டும் கண்கள் தான்
எத்தனை அழகு!

**வ.இரா.தமிழ்நேசன்(மும்பை)...**

அந்த மேட்டுக்கரையிலதான்
முன்னங்காலயும் பின்னங்காலயும்
ஒரே கவுத்துல இறுக்கவும்
தடுமாட்டத்துல நீட்டி படுத்துருச்சு....
முக்கித்தள்ள சாணமிருந்துச்சு போல
பயத்துல ஆசனவாயும் கண்ண திறந்து
பார்க்குது.

பள்ளிவிட்டு திரும்புன நாங்க
நகராமா அங்கயே நிக்க..
செவல காளை கொம்ப சீவுறாக
வானம் பார்த்த மேக்கண்ணு
தண்ணியா கொட்டுது....

அங்க கொம்ப சீவ சீவ
முண்டியடிச்சு கிட்ட போக....
மீசக்கார ஐயா
ஒரு அதட்டுதான் போட்டாரு
கால நீட்டிக் கெடந்த செவல வெறிக்க
தலகாலு புரியாம
ஒரே ஓட்டத்துல நாங்க
ஓடியாந்த ஊரு
இப்ப பெரிய கொம்பு கொம்பா முளச்சு
உருமாறி கெடக்கு...

**மஹா பர்வீன்...**



எல்லோரும்
தீர்க்கத்தரிசிகளே...
இவர்கள்
திரைமறைவு தீர்மானங்களின் தீர்ப்புகள்
தீர்ந்துபோகும் வரை!

எல்லோரும்
காரியதரிசிகளே....
இவர்கள்
கையிலிருக்கும் சுயதேவையின்
காயங்கள் ஆறும்வரை!

எல்லோரும்
அனுபவசாலிகளே....
இவர்கள்
அளவீட்டு அனுமானங்கள் எல்லாம்
வெகுமானங்கள் பெறும்வரை!

எல்லோரும்
புத்திசாலிகளே....
இவர்கள்
எட்டியப் புரிதல்களின் எண்ணங்களில்
ஏட்டுச்சுரக்காய் கசக்கும்வரை!

எல்லோரும்
அன்பானவர்களே....
இவர்கள்
பூஜிக்கும் பூஜ்ஜிய அறையில்
தன்னலக்கடவுள் தலைநீட்டாதவரை!

எல்லோரும்
பண்பானவர்களே...
இவர்கள்
சந்தர்ப்பவாத சமுதாய
வார்ப்புக்கிடங்கில்
வக்கிர வாய்ப்புகள் வராதவரை!

எல்லோரும்
நேர்மையாளர்களே....
நீங்கள்
அநியாய அவசரங்களை
அவசரகதியில் கையூட்டாக
திணிக்காதவரை!

எல்லோரும்
புரிந்துணர்வாளர்களே...
நீங்கள்
புரிந்துகொண்டே புரியாமல்
நடிக்கின்றவரை!!!

ஆகமொத்தம் அவசரத்தேடல்
வாழ மொத்தமும் வாய்தா
காப்பாற்ற மட்டும்கடவுள்
பூஜை மொத்தமும் பணத்துக்கா???

**ஜெ.ப.செல்வம்...**

# அம்முவோடு ஒரு சினிமா..

அலுவலகத்தில்
விடுப்பெடுக்க
எனக்கு
யோசனை
சொல்லிக்கொடுத்துவிட்டு..
கல்லூரியில்
சொல்லாமல்
வந்திருப்பதாக..
ஜெயம் ரவி போஸ்டரிடம்
புலம்பியபடி
காத்திருப்பாய்..

எனது
இரண்டு
நிமிட
தாமதத்திற்கு...
குறைந்தபட்சம்
பத்து நிமிடங்களாவது
திட்டி முறைத்து,
முடித்துவிட்டுத்தான்..
உனது
சுடிதாருக்கும்,
எனது
சட்டைக்கும்
நிறப்பொருத்தம்
சரிபார்ப்பாய்..

சரியான
இருக்கைபார்த்து
அமர்ந்தபிறகு..
தூரத்து
இருக்கையிலிருக்கும்
ஒரு தொப்பித்தலையை
காட்டி..
ஐந்தாம்வகுப்பில்
எனக்கு பக்கத்து
வகுப்பவன்,
என்று சொல்லி
தலையில் அடித்துக்கொள்வாய்..

படம்
துவங்கியதும்,
கூட்டத்தோடு
சேர்ந்து
ஓவென,
கத்திவிட்டு..
திரண்டு வந்த
வெட்கத்தோடு
தோளில்
சாய்ந்துகொண்டதில்,
என்னை
நாயகனாக்கியிருப்பாய்...

தோராயமாக
அரைமணி
நேரங்களுக்கு,
கெஞ்சிட
வைத்து..
இமைமூடித்திறக்கும்
அரை நொடிக்குள்,
அந்த
முத்தமெனும்
பிரளயத்தை
நிகழ்த்தி முடித்து..
அவ்வளவுதானென்பாய்,,,

நீ
இருமலுக்கு
பிடித்தவளென்று
மறுத்தாலும்,
வழக்கம்போல
முகத்தை
தூக்கிவைத்து,
இடைவேளைக்கு
ஐஷ்கிரீம்
வாங்கவைத்துவிடுவாய்..

சிரித்துக்கொண்டிருக்கும்போதே,,
விரல்களை
இறுக்கமாய்
பற்றிக்கொண்டு..
சென்றவாரம்
வீடுவந்து
விசாரித்துப்போன
தூரத்து
அத்தையை,
நினைவூட்டி..
கொஞ்சமாய்
அழுவாய்..

படம்
முடிந்து,,
வெளியேறுகையில்,
அடம்பிடித்து
வாங்கி
கைப்பைக்குள்
சேமித்துக்கொண்ட
கிழிந்த டிக்கெட்டுகளை,
எப்போதும்
ஜோடியாகவே
வைத்திருக்கப்போவதாக
சிலாகித்துக்கொள்வாய்...

நம்மை
பொருத்தவரை,,
வேறு
வேறு,
பெயர்களென்றாலும்..
நாம்
சேர்ந்து
பார்த்த,
அத்தனை
திரைப்படங்களுக்கும்,
நமது காதலொன்றுதான்
கதை.!!

கவிதை மொழியன்...



எட்டாம் வகுப்பு வரை
தெரியவில்லை
நான் எவ்வகை
பாலினம் என்பது!

அர்த்தநாரேஸ்வரர்
அழகாய் தெரிந்தார்
அப்போது தெரியவில்லை
குரோமோசோம்களில்
குறைபாடிருப்பது!

பருவ வயது வந்தது
பட்டுப் பாவாடை பிடித்தது
பொட்டு வைக்க பிடித்தது
நின்று சிறுநீர் கழிக்கும்
ஆண்களின் மத்தியில்
அமர்ந்து கழிப்பதே
அழகெனப் பட்டது!

நடையில் நளினம் தோன்றியது
சடை பின்னும் அளவிற்கு
முடி வளர்க்க பிடித்தது
லுங்கியைக்கூட
தூக்கிக்கொண்டே நடப்பேன்!

அலி என்று சிலரென்னை
அழைக்கத் துவங்கினர்
தீட்டுடைய பெண்ணைப் போல்
வீட்டிலும் ஒதுக்கி விட
காட்டினான் கடவுள் ஓர்
திருநங்கை கூட்டத்தை!

அக்கூட்டத்தில் அம்மாக்கள்
இருந்தார்கள்
அக்காக்கள் இருந்தார்கள்
பாசம் காட்டுவதெற்கென்றே
பாட்டிகளும் இருந்தார்கள்!

கைதட்டி நடப்பதையே
ஹாபியாக வைத்திருக்கிறேன்
காசும் கிடைக்கிறது
காலமும் உருளுகிறது!

குரோமோசோம் குறைபாட்டால்
குடும்பவே ஒதுக்கி விட்டதென்ற
குறை தவிர வேறில்லை!

எனக்கும் நண்பர்களுண்டு
என்னுடனும் பழகுபவர்களுண்டு
நீங்கள் கவலை கொள்ளாதீர்கள்
எனக்கும் உங்களைப் போல்
இறப்பிருக்கிறது!

முழுமையான பெண்ணாய்
பிறக்க வாய்ப்பிருக்கிறது!

**பெனடிக் அருள்...**

# புன்னகை வீதியில்



**ச**ற்று முன்தான்
சூடாய் தலையில் ஊற்றிய
நீர்கூட
காயாமல்
நிலா சைசில் ஒரு பொட்டிட்டு
புன்னகை தவழ
கடைக் கண் பார்வையால்
இழுத்து வைத்து
நிலை தடுமாறச்செய்தாள்

இன்னும்...

சில நேரங்களில் விதவையாகப்போகும்
என்று தெரியாமல்

**கா.இலட்சுமணன்...**

காணாமற் போகின்றன
எங்கும் சர்வ சுதந்திரமாய்
குழந்தைகள்

**சோமு.சக்தி...**

**கி**ளையை விட்டு
உதிர்ந்த பழுப்பிலையை
கையிலெடுத்து பார்க்கிறேன்..
சுருக்கங்களுடன் தெரிகிறது
தனித்து விடப்பட்ட
பாட்டியின் முகம்!
*

கையில் ஏறிய
கட்டெறும்பை
உள்ளிழுத்த
மூச்சுகாற்றால்
ஊதிதள்ளிய என்னையும்
எறும்பு எண்ணியிருக்கும்
புயலின் உறவுகாரனென்று!
***

திடீர் மழை
கைவசம் குடை இல்லை
நல்ல வேளை
நனையும் எண்ணம்
இருக்கிறது!
" " **

விடியும்
ஒவ்வொரு நாளையும்
பறவைகள்
வாழ்ந்து கடக்கிறது
மனிதன் வருமானத்திற்காக
கடந்து போகிறான்!

**க.அய்யப்பன்...**



**மௌ**னத்தின்
பசிதீரா பகலொன்றில்
சிறகுகள் வலிக்க வலிக்க
நதி கடந்த தும்பியொன்று
கரையொட்டிக்கிடந்த தக்கையில்
இளைப்பாற எத்தணிக்கையில்

குழப்பத்தின் புயல்காற்றில்
கொஞ்சம் கூடுதலாய் தடுமாறி
பறந்து பறந்து பூமிக்கும் வானுக்குமான
இடைவெளியில் தன்னை
நிறுத்திக்கொள்கிறது

உருளும் கண்களும் மருளும் மனமுமாய்
நினைவுகளுக்குள் என்னென்னவோ ஓட
தனிமையின் பெரும் நிசப்தம்
பேரிரைச்சலாய் கொட்டுகிறது


விடையேதும் இல்லாத
கேள்விகள் வேகமாய் பிறக்க
தனித்துப்பறப்பதும் தக்கையிலமர்ந்து
இந்த இரவைக்கடப்பதும் சிறகுகளின்
வலியைப்பொறுத்தது

**தனபால் பவானி...**

"**க**டவுள் துணை"
என்ற வாசகத்தோடு கூடிய
சாமி படத்தை
ஆலய வாசலில் நின்று
கூவி விற்றுக்கொண்டிருந்த
ஆயா அறிந்திருக்கவில்லைதான்
போனியாகத சாமிக்கெல்லாம்
"ஆயாதான் துணை" என்பதை....

**சுயம்பு...**

# நிர்மலமான தேர்



தெளிந்த நீரோடையில் ஊடுருவும்
முழுநிலவை கையகப்படுத்த எத்தனிக்கும்
வனவாசியின் வேட்டைக் கரங்கள்
இரண்டாம் மூன்றாம் முயற்சிகளில்
தூய்மையாகக் கூடும்

தூய கருமையின் ஆன்மாவில்
உதித்தெழும் சிவப்பேறிய நிலவு
ஆறஅமரப் பயணிப்பது
வெம்மையைக் கடந்தே

நெருக்கமாய் பின்னிய தருக்களின்
மேலங்கியூடு
ஊடுருவும் கிரணங்களில்
இருப்பின் திசை பற்றி
அறிந்து கொள்ளத் துடிக்கும்
கரடியின் விழிகளுள் விழுந்தெழல்
பற்றியதான பிரக்ஞையற்று
நிர்மலமாய் நகரும்
புத்தம்புது வெண்மைத் தேர்

நுஹா...


சென்னை
அரங்க எண்: 305
பூவரசி பதிப்பகம்
புத்தகத் திருவிழா
04 - 01 - 2019 முதல் 20 - 01 - 2019 வரை
YMCA
உடற் கல்வியியல் கல்லூரி
நந்தனம்
காலை: 11.00 – இரவு: 9.00
சென்னை
படைப்பு பதிப்பக வெளியீடுகள்